COMMISSIONER OF RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ
0 3 AUG 2022
CHENNAI - 600 015.

26 AUG 2022

51604 **சுருக்கம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – அரியலூர் மாவட்டம் – அரியலூர் ஊராட்சி ஒன்றியம், கடுகூர் ஊராட்சியில், ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பீமன் ஏரியை பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி–2)துறை**

அரசாணை (நிலை) எண்.89 நாள் 26.07.2022

சுபகிருது, ஆடி 10,

திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டவை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண். 51439/2021/பரா.3.3, நாள் 22.09.2021.

-----

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில், அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், கடுகூர் ஊராட்சியில் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பீமன் ஏரியை பராமரிக்க ஏதுவாக ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் இருந்து பொதுப்பணித் துறைக்கு மாற்றம் செய்து அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் 16.06.2010ம் நாளிட்ட செயல்முறையில் உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பாக அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மான எண்.228/2013–2014 நாள் 14.06.2013 மற்றும் தீர்மான எண். 117/2020, நாள் 06.10.2020இல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கடுகூர் கிராம பொது மக்கள் 30.11.2007ல் அரியலூர் மாவட்ட பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் அவர்களுக்கு அளித்துள்ள மனுவில், தங்களது ஊரில்

உள்ள பீமன் ஏரிக்கு நீர்வரத்து இல்லை என்பதால் கடுகூர் பக்கமுள்ள கள்ளமேட்டிற்கு அருகில் ஓடும் ஒரு சிற்றோடையினை நீர்த்தேக்கம் செய்து நீரினை பீமன் ஏரிக்கு திருப்பினால் விவசாயம், கால்நடை மற்றும் குடிநீர் பயன்பாட்டுக்கு உகந்ததாக இருக்கும் என்று தெரிவித்து, அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கடுகூர் ஊராட்சிக்குட்பட்ட 43.28.5 ஹெக்டேர் பாசனப் பரப்பளவு உள்ள பீமன் ஏரியினை பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ளக் கோரி 2001 முதல் விண்ணப்பித்து வந்துள்ளனர். திரு.பி.சந்திரகாசன், த/பெ. பக்கிரிசாமி, கடுகூர், அரியலூர் ஊராட்சி ஒன்றியம் என்பவரால் பீமன் ஏரியை பொதுப் பணித்துறைக்கு ஒப்படைப்பு செய்திட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை எண்.18217/2019ன் மீதான உத்தரவு நாள் 21.07.2020ன்படி ஆறு மாத காலத்திற்குள் பீமன் ஏரியினை பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ள முதன்மை பொறியாளர், பொதுப்பணித்துறை, சென்னை மற்றும் நிர்வாக பொறியாளர், பொதுப்பணித்துறை / நீர்வள ஆதாரத் துறை, அரியலூர் ஆகியோருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், பீமன் ஏரியின் புல எண்.208, நீர்ப்பிடிப்பு பரப்பளவு 21.39.5 ஹெக்டேர், ஏரியின் ஆயக்கட்டு நன்செய் பரப்பு 17.52.5 ஹெக்டேர் ஆயக்கட்டு அல்லாத புன்செய் நிலங்களில் நீர் பாய்ச்சக்கூடிய பரப்பு 25.76.0 ஹெக்டேர் ஆக கூடுதல் ஆயக்கட்டு பரப்பு 43.28.50 ஹெக்டேர் உள்ளது என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளபடியாலும், அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாலும், தொடர்புடைய பொதுப்பணித்துறை உரிய தொழில்நுட்ப விளக்கங்களை தெரிவித்து அனுமதி கோரியுள்ளதாலும் அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வரப்பெற்றுள்ள கருத்துருவின் அடிப்படையில் அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், கடுகூர் ஊராட்சியில், ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பீமன் ஏரியை பொதுப்பணித் துறைக்கு ஒப்படைப்பு செய்திட அனுமதி வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமாக ஆய்வு செய்த பின், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று, அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், கடுகூர் ஊராட்சியில், ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள புல எண்.208, நீர்ப்பிடிப்பு பரப்பளவு 21.39.5 ஹெக்டேர், ஏரியின் ஆயக்கட்டு நன்செய் பரப்பு 17.52.5 ஹெக்டேர் ஆயக்கட்டு அல்லாத புன்செய் நிலங்களில் நீர் பாய்ச்சக்கூடிய பரப்பு 25.76.0 ஹெக்டேர் ஆக கூடுதல் ஆயக்கட்டு பரப்பு

43.28.50 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட பீமன் ஏரியை பொதுப்பணித் துறைக்கு ஒப்படைப்பு செய்ய அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இந்த ஆணை முதன்மைச் செயலாளர், வருவாய்த் துறையின் 15.06.2022 நாளிட்ட இசைவு மற்றும் பொதுப்பணித் துறையின் அ.சா.கு.எண்.11085/கே1/2022-1, நாள் 05.07.2022-ன் ஒத்திசைவு பெற்ற பின்னர் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பெ.அமுதா,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**

ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை – 15.
பொதுப்பணித் துறை, சென்னை-9.
நீர்வள ஆதாரத் துறை, சென்னை-9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை-9.
மாவட்ட ஆட்சித் தலைவர், அரியலூர் மாவட்டம்.

**நகல்**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை-9.
இருப்புக்கோப்பு.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

26/7/2022
**பிரிவு அலுவலர்**
26/7/2022